**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.74/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமுண்டிஸ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : சசிகுமார் | ஜாதி | : -- |
| வயது | : 40 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : சிற்றூண்டி உணவகம் | வட்டம் | : திருத்தணி |

**16.09.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எங்குகுடியுள்ளேன் என்றால் கதவு எண் 36 அக்கையா நாயுடு தெரு, ஆதிபராசக்தி கோயில் பின்புறம் திருத்தணி என்ற முகவரியில் வசிக்கிறேன். வழக்கு சொத்தில் நான் கடைவைத்துள்ளேன் என்பதை காண்பிக்க நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தொழில்வரி இரசீது தாக்கல் செய்துள்ளேன். ஜனவரி 2018 ல் வாய்மொழியாக பாகம் நடந்தது என்று கூறியுள்ளதற்கு ஆதரவாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை செட்டில்மென்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதிகொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் இரத்துசெய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்குமூலம் பத்தி 6 ல் ஆறாம் பிரதிவாதியிடம் மனு அளித்துள்ளார்கள் என்று நான் எதை சொல்லியுள்ளேன் எனக்கு தெரியவில்லை.

2. பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்கள் பராமரிப்பு சட்டம் மற்றும் விதிகளின்படி அந்த மனு வருவாய் கோட்டாட்சியரிடம் 1 ஆம் பிரதிவாதி வெங்கடேசனால் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அதில் நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அப்பா வெங்கடேசன், 2, 3 பிரதிவாதிகள் அந்த விசாரணையில் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் அவர்கள் வரவே இல்லை 1 ஆம் பிரதிவாதி மட்டும் தான் வந்திருந்தார். 03.08.2021 ஆம் தேதியிட்ட உத்தரவின்படி 1 ஆம் பிரதிவாதி எனக்கு எழுதிகொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் இரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு எந்த உத்தவும் எனக்கு வரவில்லை. நான்

பொய்யாக சொல்கிறேன் என்றாலும் மேற்படி உத்தரவு பிறப்பிக்கபட்ட பின்பு தான் நான் இந்த பொய்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

3. முதியோர் பராமரிப்பு உத்தரவின் மீது நான் மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் முதியோர் பராமரிப்பு உத்தரவு விவரம் எனக்கு தெரியும் என்றாலும் முதியோர் பராமரிப்பு உத்தரவின் மீது நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை. நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டிலும் எனக்கு எதிராக18.01.2022 ல் உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது என்றால் அப்படி எந்த உத்தரவும் இல்லை. எங்களை நீதிமன்றத்தில் தான் பார்த்துக்கொள்ள சொன்னார்கள். நான் மாவட்ட ஆட்சியரிடம் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லையா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் போனோம் ஆனால் உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

4. இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து இன்றுவரை 1 ஆம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் ஒருகடையில் தேவையில்லாத பொருட்களை போட்டு வைத்துள்ளேன். மளிகைகடையை காலி செய்துவிட்டு நகராட்சி அலுவலகம் எதிரில் சிற்றுண்டி கடை நடத்தி வருகிறேன். நான் சொல்லுவது போல் வழக்கு சொத்து எனது சுவாதினத்தில் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாய்மொழியாக பாகம் நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து தவறான சங்கதிகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)